DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 207/2024 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| Name | : | **புகழேந்தி** |
| Father's Name | : | முத்து சுந்தரபாண்டியன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 53/2026 |

**(வழக்கின் எதிரி ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 03.02.2026

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது D. மாம்பட்டி கிராமத்தில் குடியிருந்து கேபிள் டிவி நிறுவனம் தனியாக நடத்தி வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரி பாலமுருகன் என்பவரை எனக்கு தெரியும். எதிரி திருக்கோஷ்டியூரில் கேபிள் ஆபரேட்டராக வேலை பார்த்து வருகிறார். சாட்சி மலையாண்டி மதகுபட்டி கேபிள் ஆபரேட்டர் ஆவார், சாட்சி மாரியப்பன் பட்டமங்களம் கேபிள் ஆபரேட்டர் ஆவார். சாட்சி பிரவின் ராஜ் எனக்கு உறவினர் ஆவார்.

2. நான் மத்திய, மாநில அரசின் அனுமதி பெற்று எனது கேபிள் டிவி தொழிலை ஏரியூர், D. மாம்பட்டி ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கு உட்பட்டவைகளில் நான் கேபிள் டிவி தொழில் செய்து வருகிறேன். கடந்த 23.01.2019 ம் தேதி காலை 6.30 மணியளவில் ஏரியூரில் உள்ள D. மாம்பட்டியில் எனது

வீட்டில் நான் இருந்த போது ஏரயூர் பொதுமக்கள் என்னை தொடர்பு கொண்டு கேபிள் டிவியில் படம் தெரியவில்லை என்று புகார் தெரிவித்தார்கள்.

3. அதன் அடிப்படையில் நான் நடத்தி வரும் எனது வீட்டிற்கு அருகில் உள்ள அறைக்கு சென்று பார்த்தபோது கேபிள் லைன் சுத்தமாக தெரியவில்லை. அதற்கு பிறகு நான் மதகுபட்டி கேபிள் ஆபரேட்டர் மலையாண்டி என்பவரை தொடர்பு கொண்டு உங்களுக்கு கேபிள் லைன் வருகிறதா ஏதாவது பிரச்சினையா என்று அவரிடம் கேட்டேன். அதற்கு மலையாண்டி எல்லா லைனும் சரியாக உள்ளது என்றும் உங்கள் லைனில் பிரச்சினை உள்ளதா என்று பார்க்க சொன்னார். மேலும் நான் மலையாண்டியை லைனை சரிபார்க்க என்னுடன் வருமாறு அழைத்தேன்.

4. பின்பு பட்டமங்களம் கேபிள் ஆபரேட்டர் மாரியப்பனை கேபிள் ஜாயின்ட் அடிப்பதற்காக அழைத்தேன். பின்பு மலையாண்டி மற்றும் மாரியப்பன் வந்தபிறகு நாங்கள் மூவரும் கன்ட்ரோல் ரூமில் இருந்த இணைப்புகளை சரிபார்த்தோம். இணைப்புகள் வரவில்லை என்பதால் அதனை சரிசெய்வதற்காக நாங்கள் அன்றைய தினம் காலை 7.30 மணியளவில் ஆபத்தாரணப்பட்டியை தாண்டி அரளிக்கோட்டைக்கு வெளியே சுடுகாடு போகும் வழியில் தண்ணீர் தொட்டிற்கு அருகில் ஆஜர் எதிரி மதகுப்பட்டி வழியாக ஏரியூர் செல்லக்கூடிய கேபிள் வயரை அருவாளால் வெட்டிக்கொண்டிருந்தார்.

5. நான் என்னுடன் வந்த மலையாண்டி மற்றும் மாரியப்பனிடம் கேபிள் வயரை எதிரி பாலமுருகன் தான் வெட்டிக்கொண்டிருக்கிறார் என்றும் அதை பற்றி அவரிடம் கேட்கும்படி சொன்னேன். நான் எதிரியிடம் ஏன் கேபிள் வயரை வெட்டிக்கொண்டிருக்கிறாய் என்று கேட்டேன் அதற்கு எனது அம்மாவையும் என்னையும் தரக்குறைவான வார்த்தைகளால் பேசி கையில் கேபிள் வெட்டிக்கொண்டிருந்த அருவாளை ஓங்கி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி உங்களுக்கு எல்லாம் லைன் ஓடிக்கொண்டிருக்கிறது என்றும் எனக்கு மட்டும் லைன் ஓடவில்லை என்று சொன்னார்.

6. அதன்பிறகு என்னுடன் வந்த மாரியப்பன் மற்றும் மலையாண்டி ஆகியோர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கலாம் என்று சொல்லி அங்கிருந்து அழைத்து வந்தார்கள். அதன்பிறகு எனது உறவினர் பிரவின்ராஜ் என்பவருடன் சுமார் சம்பவம் நடந்து சுமார் ஒரு மணி நேரம் கழித்து திருக்கோஷ்டியுர் காவல்நிலையம் சென்று நான் எழுத்து பூர்வமான புகார் மனுவை கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார்மனு நான் காவல்நிலையத்தில் கொடுத்தது தான்.அதில் காட்டப்படும் புகழேந்தி என்னும் கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் மனு அ.த.சா.ஆ.1** ஆகும்.

7.புகார்மனுவில் என்னுடன் வந்த பிரவின்ராஜ் என்பவர் சாட்சி கையொப்பம் செய்தார். எதிரி சேதப்படுத்திய எனது கேபிள் வயர்களின் மதிப்பு ரூ.17000/- இருக்கும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அருவாள் எதிரி சம்பவத்தில் எனது கேபிள் வயரை வெட்டி சேதப்படுத்த பயன்படுத்தியது தான். அந்த **அருவாள் அ.த.பொ.சா.1** ஆகும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கேபிள் வயர்கள் எனக்கு சொந்தமானவை. எதிரியால் சேதப்படுத்தியது ஆகும். அந்த கேபிள் வயர் கருப்பு நிற கேபிள் வயராகும். அது **அ.த.பொ.சா.2** ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் TCCL அனுமதி எந்த பகுதிக்கு வாங்கியுள்ளேன் என்றால் ஏரியூர் மற்றும் D.மாம்பட்டி பகுதிக்கு வாங்கியுள்ளேன். இந்த விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எதிரி பாலமுருகனுக்கு சொந்தமான கேபிள் வயரை நான் வெட்டி திருடிச் சென்றது சம்மந்தமாக திருக்கோஷ்டியூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளாரா என்றால் ஆமாம். அரளிக்கோட்டை பகுதியில் கேபிள் டிவி நடத்துவதற்கு எனக்கு லைசென்ஸ் உரிமை இல்லை என்றால் சரிதான். ஏரியூர் பகுதியில் கேபிள் டிவி தெரியவில்லை என்று யார் கூறியது என்று விபரத்தை நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

2. எனக்கு சொந்தமான கேபிள் வயரை துண்டு துண்டாக வெட்டிப்போட்டுள்ளார் என்று புகாரில் குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.த.பொ.சா.2 எத்தனை துண்டுகளாக வெட்டப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. அ.த.பொ.சா.2 கேபிள் வயர் எனக்கு சொந்தமான என்பதை காட்டும் சிறப்பான குறியீடு உள்ளதா என்றால் அவ்வாறு தனிக்குறியீடு யாருக்கும் கிடையாது. அ.த.சா.ஆ.1 புகார் மனுவில் எவ்வளவு நீளம் கேபிள் வயர் வெட்டப்பட்டுள்ளது என்று கூறினேனா என்றால் தற்போது ஞாபகமில்லை.

3. அ.த.சா.ஆ.1 புகார் மனுவில் எத்தனை மீட்டர் நீளம் கேபிள் வயர் காணாமல் போனதாக கூறியுள்ளேன் என்றால் வெட்டிய வயர் சுமார் ஒரு கி.மீ தூரத்திற்கு உட்பட்டிருக்கும். வெட்டப்பட்ட அ.த.பொ.சா.2 கேபிள் வயரை சுற்றி காவல்நிலையத்திற்கு எடுத்து சென்றவர்கள் யார் என்றால் நான் தான் போலிசாரோடு சேர்ந்து எடுத்து சென்றேன். அ.த.பொ.சா.2 கேபிள் வயர் வெட்டப்பட்டதாக நாளிலிருந்து எத்தனை வருடங்களுக்கு முன்பு வாங்கப்பட்டது என்றால் வெட்டப்பட்ட நாளிலிருந்து சுமார் 2, 3 வருடம் முன்பு வாங்கப்பட்டது.

4. வெட்டப்பட்டதாக சொல்லும் கேபிள் வயரின் பில்லை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை புதிதாக வாங்கிய வயருக்கான பில்லை கொடுத்தேன். பில்லை அ.த.சா.ஆ.1 புகார்மனுவுடன் கொடுத்தேனா என்றால் இல்லை. பில்லை எப்போது கொடுத்தேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. புகாரில் சொல்லப்பட்ட ரூ.17000/-க்கான பில்லை வாங்கினேனா என்றால் இல்லை. வெட்டப்பட்ட கேபிள் வயரை கட்டர் வைத்து தான் வெட்ட முடியும் என்றால் அருவாளுடன் எதிரி வெட்டிக்கொண்டிருக்கும்போது நான் பார்த்தேன்.

5. கேபிள் வயரை எவ்வளவு உயரத்தில் போடவேண்டும் என்று விதிமுறை உள்ளதா என்றால் எங்களிடம் அது பற்றி சொல்லவில்லை. வெட்டப்பட்ட அ.த.பொ.சா2 கேபிள் வயர் எவ்வளவு உயரத்தில் கட்டப்பட்டிருந்தது

என்றால் ஒரு இடத்தில் 10 அடி , ஒரு இடத்தில் 7 அடி , ஒரு சில இடங்களில் இன்னும் சற்று அதிகமான உயரத்தில் இருக்கும். 10 அடிக்கு உயரமான இடத்தில் உள்ள கேபிளை அருவாளால் வெட்டமுடியாது என்றால் வெட்டப்பட்ட கேபிள் வயர் புளியமரத்தின் ஊடே சென்ற வயரை தான் எதிரி வெட்டினார். இந்த விபரத்தைபோலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை.

6. வெட்டப்பட்ட இடத்திலிருந்து ஜெயம்கொண்டநிலை கிராமம் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 11 கி.மீ தூரம் இருக்கும். காவல்நிலையத்திற்கு புகார் மனு கொடுக்கும்போகும்போது மாரியப்பனும், மலையாண்டியும் வந்தார்களா என்றால் இல்லை. எதிரி எனது அம்மாவை அசிங்கமாக திட்டிய விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மாரியப்பனையும், மலையாண்டியையும் போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவத்தன்று விசாரித்தார்கள். அ.த.சா.ஆ.1 புகார் மனுவில் மாரியப்பனும், மலையாண்டியும் கையொப்பம் செய்தார்களா என்றால் இல்லை, நானும் பிரவின்ராஜீம் கையொப்பம் செய்தோம். கேபிள் வயரை வெட்டும்போது எத்தனை மணி என்றால் சுமார் காலை 7.00 என்றால் தவறு சரியாக 7.30 மணிக்கு தான் வெட்டினார்.

7. சம்பவயிடத்திலிருந்து திருக்கோஷ்டியுர் காவல்நிலையத்திற்கு 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் 10 நிமிடம் அல்லது 15 நிமிடத்தில் சென்றுவிடலாம். நான் ஏன் உடனே காவல்நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் எனது உறவினரை அழைத்து கொண்டு காவல்நிலையம் சென்றேன். பிரவின்ராஜ் காவல்நிலையத்தில் செல்வாக்கான நபர் என்றால் இல்லை. எதிரிக்கு பாத்தியப்பட்ட கேபிளை நான் வெட்டியதற்காக என் மீது புகார் கொடு'க்கப்பட்டது என்றும் மேற்படி புகாரிலிருந்து தப்பித்து கொள்வதற்காக எனது உறவினர் பிரவின்ராஜ் என்பவரின் செல்வாக்கினா'ல் எதிரி மீது பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. அ.த.பொ.2 கேபிள் வயர் எனக்கு பாத்தியப்பட்டது அல்லது என்றும் எதிரிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. சாட்சிகள் மாரியப்பனும், மலையாண்டியும் சம்பவயிடத்திற்கு வரவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கேபிள் டிவி உரிமம் வாங்கவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.03 14:13:51 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**